


**25.05.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் ஆபரேஷன் சிந்தூர் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் தெரிவித்துள்ளார்.

2. வளர்ந்த இந்தியாவை உருவாக்க ஆரோக்கியமான சமூகத்தின் அவசியத்தை மத்திய விளையாட்டு துறை அமைச்சர் டாக்டர் மன்சுக்மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்

3. தமிழகத்தில் திருநங்கைகளின் நலனிற்கான திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருவதாக அரசு அறிவித்துள்ளது.

4. கோவை மாவட்டத்தில் அதிகனமழையை எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளதாக மாநில அமைச்சர் திரு. முத்துசாமி தெரிவித்துள்ளார்.

5. ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் குஜராத்தில் பிற்பகல் மூன்றரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸை - குஜராத் டைட்டன்ஸை எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖

<u>மன் கி பாத்</u>

தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் ஆபரேஷன் சிந்தூர் புதிய நம்பிக்கையையும், உற்சாகத்தையும் அளித்துள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 122-வது முறையாக இன்று உரையாற்றியஅவர், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது ராணுவ வீரர்கள் வெளிப்படுத்திய வீரம் பாராட்டுக்குரியது என்றார்.

தீவிரவாதிகளின் மறைவிடங்களை ஆயுதப்படைகள் துல்லியமாக தாக்கி அழித்ததை சுட்டிக்காட்டிய அவர், தீவிரவாதத்தை முழுவதுமாக தகர்த்தொழிக்க அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்ற உறுதியுடன் இருப்பதாக கூறினார்.

ஆபரேஷன் சிந்தூர் தேசபக்தியை உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில் நாடுமுழுவதும் கிராமங்கள் மற்றும் நகரப்பகுதிகளில் திரங்கா மூவர்ண கொடி யாத்திரைகள் நடத்தப்படுவதை சுட்டிக்காட்டினார்.

மூவர்ண கொடி யாத்திரைகளை மேற்கொள்வது, சமூக ஊடகங்களில் கவிதைகளை பதிவிடுவது, ஓவியங்கள் உள்ளிட்டவைகளின் மூலம் மக்கள் தங்களது ஆதரவு மற்றும் பாராட்டுகளை ஆயுதப்படைகளுக்கு தெரிவித்து வருவதாக பிரதமர் கூறினார்.

இந்திய வீரர்கள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தீவிரவாத முகாம்களை அழித்ததாக சுட்டிக்காட்டிய பிரதமர், உள்நாட்டில் தயாரிப்போம் திட்டத்திற்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி இது என்றார்.

இந்த வெற்றிக்கு பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் கடின உழைப்பே காரணம் என்று சுட்டிக்காட்டினார்.

நாட்டின் உண்மையான பலம் பொதுமக்களின் பங்களிப்பு என்று கூறிய பிரதமர் உள்நாட்டில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு வலியுறுத்தினார்.

இதன்மூலம் பொருளாதார தன்னிறைவு அடைவதோடு மட்டுமின்றி நாட்டின் முன்னேற்றத்தில் மக்கள் ஒவ்வொருவரும் பங்கேற்பது உறுதிசெய்யப் படுவதாக கூறினார்.

உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்போம் இயக்கத்தின்கீழ் மக்கள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொம்மைகளை வாங்கி பரிசளிக்க முன்வர வேண்டுமென்று கூறியஅவர், உள்நாட்டு சுற்றுலா தளங்களில் விடுமுறை நாட்களை பார்வையிட வேண்டும் என்றார்.

திருமணம் உள்ளிட்ட விழாக்களுக்கு இந்திய கைவினைஞர்களால் உருவாக்கப்பட்ட பரிசுகளை வழங்க வேண்டுமென்றும் பிரதமர் அறிவுறுத்தினார்.

மாவோயிஸ்டுகளின் ஆதிக்கம் நிறைந்த பகுதிகளில் தற்போது போக்குவரத்து, கல்வி, கைவினை கலைகள், அடிப்படை வசதிகள், உள்ளிட்டவைகள் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ந்து வருவதாக பிரதமர் சுட்டிக்காட்டினார்.

மஹராஷ்டிர மாநிலம் கதேஜாரி கிராமத்திற்கு முதல்முறையாக பேருந்து சேவை தொடங்கப்பட்டு உள்ளது, மாவோயிஸ்டுக்கு எதிரான ஒன்றிணைந்த போராட்டத்தின் வெற்றி என்று குறிப்பிட்ட அவர், அடிப்படை வசதிகள் ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் தற்போது சென்றடைவதாக கூறினார்.

சர்வதேச யோகா தினம் அடுத்தமாதம் 21-ம் தேதி கொண்டாடப்படவுள்ள நிலையில் மக்கள் அனைவரும் யோகா பயிற்சியை தங்களது அன்றாட வாழ்வின் ஒருபகுதியாக இணைத்துக்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்திய பிரதமர், உலகம் முழுவதும் யோகா தினம் குறித்த விழிப்புணர்வு பெருமளவில் காணப்படுவதாக குறிப்பிட்டார்.

யோகா தினத்தை மக்கள் ஆர்வத்துடன் கொண்டாட வேண்டுமென்று கூறிய பிரதமர், இந்த ஆண்டு விசாகப்பட்டினத்தில் நடைபெறும் யோகா தின நிகழ்ச்சியில் தாம் பங்கேற்கவுள்ளதாக தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் தேனீக்களின் பங்களிப்பை சுட்டிக்காட்டிய பிரதமர், தேனி வளர்ப்பின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

தேனி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள உள்ளூர் விவசாயிகள் மற்றும் மகளிர் தொழில் முனைவோரிடமிருந்து தேன் வாங்கி பயனடைய வேண்டுமென்றும் அவர் அறிவுறுத்தினார்.

தேனி வளர்ப்பின் நன்மைகள் குறித்து திருச்சி போதாவூர் வேளாண் பட்டதாரி மற்றும் வேளாண் தொழில்முனைவோர் திரு. ஒண்டிமுத்து பேசுகையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

மன்சுக் மாண்டவியா

வளர்ந்த இந்தியாவை உருவாக்க ஆரோக்கியமான சமூகத்தின் அவசியத்தை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பத்திரிக்கையாளர்கள் பங்கேற்ற ஞாயிற்றுக்கிழமைகளில் சைக்கிள் ஓட்டுவோம் இயக்கத்தில் இன்று பேசிய அவர், வளமான வளர்ச்சியடைந்த தேசத்தை உருவாக்க நாம் ஒவ்வொருவரும் உறுதியேற்கவேண்டுமென்றார்.

நாடுமுழுவதும் தொள்ளாயிரத்திற்கும் அதிகமான இடங்களில் இன்று பத்திரிக்கையாளர்கள் பங்கேற்ற ஆரோக்கிய இந்தியா இயக்கம் மக்கள் பங்களிப்புடன் மேலும் வலுப்பெறும் என்றார்.

❖❖❖❖❖❖❖

பிரிக்ஸ்

பிரிக்ஸ் நாடுகளின் கலாச்சார அமைச்சர்கள் மாநாடு பிரேசிலில் நாளை தொடங்குகிறது.

மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் தலைமையிலான இந்திய குழுவினர் இதில் பங்கேற்கின்றனர்.

உலகளாவிய கலாச்சார மேம்பாட்டில் இந்தியாவின் தனித்துவமான பங்களிப்பு குறித்து இதில் எடுத்துரைக்கப்படும்

பாரம்பரியத்தை பாதுகாத்தல், கலாச்சாரம் மற்றும் மக்கள் தொடர்புகளை மேம்படுத்துவதில் இந்தியாவின் உறுதியான நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகளையும் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் மேற்கொள்வார்.

❖❖❖❖❖❖❖

அனைத்து கட்சி குழு

ஆபரேஷன் சிந்தூர் செயல்பாடுகள் தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டை எடுத்துரைப்பதாக காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சசிதரூர் தெரிவித்துள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் குறித்து அமெரிக்க நாடுகளிடம் எடுத்துரைப்பதற்காக நியூயார்க் சென்றுள்ள திரு. சசிதரூர் தலைமையிலான அனைத்துக்கட்சி குழு உயர்மட்ட பிரதிநிதிகளை சந்தித்தனர்.

தொடர்ந்து பேசிய திரு.சசிதரூர், தீவிரவாதத்தை அனைத்து நிலைகளிலும் வேரொடு களைய ஒட்டுமொத்த இந்தியாவும் ஒருங்கிணைந்து செயல்படுவதாக கூறினார்.

இதனிடையே திமுக நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி தலைமையிலான அனைத்து கட்சிக்குழுவினர் ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து எடுத்துரைத்தனர்.

❖❖❖❖❖❖

முதலமைச்சர்கள் கூட்டம்

நல் ஆளுமை குறித்த தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி ஆளும் மாநில முதலமைச்சர்கள் மாநாடு பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் புதுதில்லியில் தற்போது நடைபெற்று வருகிறது

பி.ஜே.பி. தேசியதலைவர் திரு. ஜே.பி. நட்டா, மத்திய அமைச்சர்கள் திரு.அமித்ஷா, திரு.ராஜ்நாத் சிங், உத்திரபிரதேசம், குஜராத் உள்ளிட்ட 18 மாநில முதலமைச்சர்கள், துணை முதலமைச்சர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ள இக்கூட்டத்தில் சிறந்த நிர்வாகத்தை உறுதிசெய்வதற்கான வழிமுறைகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖

ஷிவ்ராஜ் சிங்

வளர்ச்சியடைந்த வேளாண்மை தொடர்பான கிரிஷி சங்கல்ப் அபியான் தேசிய இயக்கத்தை மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் ஒடிசா மாநிலம் பூரியில் வரும் வியாழக்கிழமை தொடங்கிவைக்கிறார்.

வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் புத்தாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வோர் மற்றும் வேளாண் விஞ்ஞானிகள் தங்கள் கருத்துக்களை பரிமாறிக்கொள்ள இதுவகை செய்யும்.

நாடுமுழுவதும் 700 மாவட்டங்களில் நடைபெறும் இந்த இயக்கத்தில் ஒன்றரை கோடிக்கும் அதிகமான விவசாயிகள் நேரடியாக பங்கேற்கின்றனர்.

❖❖❖❖❖❖

திருநங்கைகள்

திருநங்கைகளின் நலனிற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இவர்களுக்கான ஓய்வூதிய திட்டத்திற்கு நடப்பாண்டு 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு ஆயிரத்து 760 திருநங்கைகள் பயனடைந்து வருகின்றனர்.

மேலும் திருநங்கைகளின் நலனை உறுதி செய்வதற்காக கல்வி மேம்பாடு, சுயதொழில் மானியம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

❖❖❖❖❖❖

முத்துசாமி

கோவை மாவட்டத்தில் அதிகனமழையை எதிர் கொள்வதற்கான ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளதாக மாநில வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. முத்துசாமி தெரிவித்துள்ளார்.

மேட்டுப்பாளையம் வால்பாறை உள்ளிட்ட பகுதிகளில் மழை பாதிப்புகள் குறித்து கேட்டறிந்த பின் செய்தியாளர்களிடம் பேசியஅவர், கனமழையால் பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

அவசர காலங்களில் மீட்புபணிகளை மேற்கொள்ள தேவைப்படும் இயந்திரங்கள் உட்பட அனைத்து உபகரணங்களும் தயார் நிலையில் உள்ளதாக கூறியஅவர், தேவைப்பட்டால் கூடுதல் பேரிடர் மீட்புக் குழுவினர் வரவழைக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதுடன் அவர்களுக்கான மாற்றுப்பாதைகள் குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும், மழைவெள்ளம் எளிதில் வடிந்து செல்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும் கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

நீலகிரி வாய்ஸ்

நீலகிரி மாவட்டத்தில் இன்றும் நாளையும் அதிகன மழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் அனைத்து பாதுகாப்பு முன்னேற்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

நெல்லை வாய்ஸ்

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பரவலாக மழைபெய்து வருவதையடுத்து நெல்லை மாவட்டத்தில் அணைகளின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

வானிலை

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தேனி திண்டுக்கல் திருப்பூர், கோவை, நீலகிரி மாவட்டங்களில் அடுத்தசில மணிநேரங்களில் இடிமின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே ஈரோடு பவானி சாகர் அணையின் நீர் பிடிப்பு பகுதிகளில் மழை பெய்துவருவதால் அணைக்கு நீர்வரத்து 4 ஆயிரத்து 400 கனஅடியாக அதிகரித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

இருவரி

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஒன்றியத்தில் வரும் வெள்ளிக்கிழமை முதல் 3 நாட்களுக்கு மகளிர் சுயஉதவிக்குழு உற்பத்தி பொருள் கண்காட்சி நடைபெறவுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் போதை பொருள் இல்லா உலகத்தை உருவாக்குவது குறித்த விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் இன்று நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் குஜராத்தில் பிற்பகல் மூன்றரை மணிக்கு குஜராத் டைட்டன்ஸ் - சென்னை சூப்பர் கிங்ஸையும்,

டெல்லியில் இரவு ஏழரை மணிக்கு சன் ரைஸர்ஸ் ஹைதராபாத் - கொல்கத்தா நைட் ரைடர்ஸையும் எதிர்கொள்கின்றன.

❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

பிரென்ஞ்ச் ஓப்பன் டென்னிஸ் போட்டிகள் இன்று பாரீசில் தொடங்குகிறது.

வரும் 8-ம் தேதிவரை நடைபெறும் இப்போட்டியில் உலகின் முன்னணி வீரர்கள் அல்கராஸ், நோவாக் ஜோக்கோவிச், பெட்ராக் குவிட்டோவா உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖❖